துரித தபால் சேவைக்கு
இன்றே நாடுங்கள்!
DHL International
பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

மலர் 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 19 சனிக்கிழமை (05-10-1991) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 305

# பெரும் ராணுவ நடவடிக்கை
# கிழக்கில் மீண்டும் ஆரம்பம்!

## கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில்
## நேற்று கண்டபடி குண்டுவீச்சு!

கொழும்பு, அக்டோபர் 5

ஸ்ரீலங்காப் படையினர் கிழக்கில் மீண்டும் பெரும் இரராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இராணுவம், விசேட அதிரடிப்படை மற்றும் விமானப் படை ஆகியன கூட்டாக தாக்குதல்களை நடத்தி. வருகின்றன. கஞ்சிகுடிச்சாறு பகுதியில் நேற்று கடும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களும் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் எல்லைப்புற பகுதிகளில் — தமிழர்கள் வாழும் பிரதேசங்களிலேயே இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கஞ்சிகுடிச்சாறு, வட்டமடு பகுதிகளில் நேற்று பயங்கர ஷெல் தாக்குதல்களும், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி விமானக் குண்டு வீச்சுக்களும் நடத்தப்பட்டன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து எடுத்தடுத்து புறப்பட்டுச் சென்ற போர் விமானங்கள் கண்டபடி குண்டுகளை பொழிந்து தள்ளின என்றும் —

இதனால் கஞ்சிகுடிச்சாறுப் பகுதிக் காடுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஆரம்பமான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் —

அங்கு விமானப் படையினரின் உதவியுடன் இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும் கூட்டாகத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் — நேற்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்தோ, வேறு விரிவான தகவல்களோ நேற்று வெளியாகவில்லை.

[ஒ-த-சி]

## சூடுபட்டு காயம்

யாழ்ப்பாணம், அக். 5

நேற்றுக் காலை மாவிட்டபுரத்தில் நிலைகொண்டுள்ள படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லங்கலட்டியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

அட்புக்குட்டி செல்லையா (வயது 63) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

## செயலகத்துக்கு "ஓட்டோ"

யாழ் செயலக பாவனைக்கென 'ஓட்டோ' ஒன்று, விரைவில் கப்பலில் இங்கு கொண்டுவரப்பட இருக்கிறது. (ஒ 3)

## தமிழர் கைது

மட்டக்களப்பு, ஏரான்குளம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை த. தெய்வா என்பவரை படையினர் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

12 வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்த

## திருவிலில் இன்று மாலை மாபெரும் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 5

லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 வேங்கைகளின் நான்காம் ஆண்டு நினைவு எழுச்சி தினமும், மாபெரும் நினைவுக் கூட்டமும் இன்று வல்வெட்டித்துறை திருவில் மாவீரர் சதுக்கத்தில் நடைபெறவிருக்கின்றன.

மாலை 3-30 மணிக்கு உடுப்பிட்டி சந்தியிலிருந்து எழுச்சி ஊர்வலம் ஆரம்பமாகி அது திருவில் மாவீரர் சதுக்கத்தைச் சென்றடையும். அங்கு மாலை 5 மணியளவில் நினைவுக் கூட்டம் ஆரம்பமாகும்.

திரு. அரசண்ணா தலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

முதல் நியமிக்கப்பட்ட ஆறு பேருடன் மேலும்

## 2 பெண்கள் உட்பட மூவர் யாழ். எம். பிக்களாக தெரிவு

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவின் (ஈரோஸின்) எம். பிக்களாக நியமிக்கப்பட்டிருக்கும் ஏனைய மூன்று பேரினதும் பெயர், விவரங்கள் வெளியாகியுள்ளன.

சுயேச்சைக் குழுவின் சார்பில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒன்பது எம். பிக்களில் ஆறு பேரின் பெயர், விவரங்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

எஞ்சிய மூன்று பேரில் இருவர் பெண்கள். மூவரும் வன்னி, திருமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

1. நிலாவதி, இராமசாமி (2 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)
2. தமயந்தி இவசுந்தரலிங்கம் (கோவில்குளம், வவுனியா)
3. தேவமனோ மாதவராசா (வருணபுரி, தம்பலகம்) (உ-3)

## ஜாப். பிரதமர் பதவி விலகுவார்

டோக்கியோ, அக். 5

ஜப்பானின் பிரதமர் துஷிகி கைபூ இம் மாத இறுதியில் தமது பதவியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

இம் மாதம் 27 ஆம் திகதி ஆளும் கட்சிக்குள் நடைபெறவுள்ள தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்று அவர் நேற்று அறிவித்தார் [ஒ-த]

## யாழ். எம். பிக்கள் அக்.8 இல் சத்தியப்பிரமாணம் செய்வர்

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். மாவட்டத்துக்குரிய ஈரோஸ் (சுயேச்சைக் குழு) நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள், அனேகமாக எதிர்வரும் எட்டாம் திகதி எம். பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் நாளை கொழும்பு செல்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் பெயர்ப் பட்டியல்கள் ஏற்கனவே தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. இதனால் இவர்கள் ஆறு பேரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமதாஸாவுக்கு ஆதரவு குறைகிறது?

கொழும்பு, அக். 5

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு வரும் நாள் நெருங்க, நெருங்க ஜனாதிபதி பிரேமதாசாவுக்குள்ள ஆதரவு மேலும் குறைந்து வருவதாகக் கணிக்கப்படுகிறது.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாக லலித் குழுவினர் செய்து வரும் பிரசாரத்தினால் ஐ. தே. கட்சிக்குள்ளே பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளதாகவும்—

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை விடயத்தில் பிரேமதாசாவுக்கு ஆதரவாக இருந்தவர்கள் கூட ஆயுத விவகாரம் வெளிச்சத்துக்கு வந்த பின்னர் மனம் மாறித் திசை திரும்பி வருவதாக மதிப்பிடப்படுகிறது.

இந்தவேளை யார்த்து ஈரோஸ் எம். பிகளின் நாடாளுமன்றம் வருவது பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்காகவே என்றும்—

அது பிரேமாவுக்கு விடுதலைப் புலிகள் ஆதரவு தருகின்றனர் என்பதை நிரூபிப்பதாகவும் ஐ. தே. கட்சியின் உறுப்பினர்கள் பலர் உணர்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஈழப் போராளிகளுக்கு எதிராக
## தமிழக கரையோரத்தில் "ஒபரேஷன் நாரை"

சென்னை, அக். 5

ஈழப்போராளிகளுக்கு எதிராக கடந்த வாரம் தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காவல் துறையினரின் நடவடிக்கைக்கு "ஒப்ரேஷன் நாரை" (Operation Flemingo) என்று பெயரிடப்பட்டிருந்தது.

தமிழ்நாடு பொலிஸ் மா-அதிபர் திரு. வோல்டர் தேவாரம் இதனைத் தெரிவித்தார்.

நாரைகளின் குளிர்கால வசிப்பிடமான குமரிமுனை மற்றும் வேதாரணியம் சரணாலயங்களை மீண்டும் பறவைகளுக்கும், மனிதர்களுக்கும் பாதுகாப்பான இடங்களாக உத்தரவாதப்படுத்தவே, காவல்துறையினரின் நடவடிக்கைக்கு "ஒப்பரேஷன் நாரை" என்று பெயரிடப்பட்டதாக, திரு. தேவாரம் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (த)

## மட்டு. 13 ஆம் கிராமத்தில்
## படுகொலை செய்யப்பட்ட 12 தமிழர்களின் விவரம்

மட்டக்களப்பு, 13 ஆம் கிராமத்தில் கடந்த 30 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய வெறியாட்டத்தில் பலியான 12 தமிழ் மக்களின் பெயர், விவரங்கள் கிடைத்துள்ளன.

13 ஆம் கிராமத்தில் தமிழர்களின் 8 வீடுகள் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டன. 8 வீடுகளில் இருந்த உடைமைகள் மற்றும் கால்நடைகள் என்பனவும் படையினரால் அபகரித்து செல்லப்பட்டன.

அழகன், கணபதிப்பிள்ளை, மாமாங்கம் ஆகியோரது வீடுகளே எரியுண்டு அழிந்தன.

படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களது விவரம் வருமாறு:-

சி. வடிவேலு [85 வயது], பெ. அரியமலர் [26 வயது], பொ. நாகம்மா [40 வயது], த. செல்லையா [55 வயது], வே. கண்ணம்மை [80 வயது], சந்தசாமி தேவசோதி (12 வயது], குருதாசன் சிவித்தம்பி [70 வயது], செப்மாலை [28 வயது], அவரது பிள்ளைகள் நால்வர்; (ஒ)

~~~~~

## முச்சந்தி முரளி



அப்ப... கரையோரத்திலை மீனுக்கு வலை விரிச்சிருக்கினம் போலை......!

## சார்க் மாநாட்டுப் பிரச்சினை:
## 89 இல் பிரேமா செய்ததற்கு இந்தியா இப்போது பதிலடி!

கொழும்பு, அக். 5

கொழும்பில் அடுத்தமாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சார்க் உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதற்கான சாத்தியம் மேலும் குறைந்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

1989 ஆம் ஆண்டின் நான்காவது சார்க் உச்சி மாநாடு கொழும்பில் நடக்க இருந்தது. அவ்வேளை இலங்கையில் வெளிநாட்டுப் படை [இந்தியப் படை] நிலை கொண்டிருப்பதால் உச்சி மாநாட்டை நடத்துவதற்குத் தாம் விரும்பவில்லை என்று ஜனாதிபதி பிரேமதாஸா பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் கொழும்பில் நடக்கும் மாநாட்டிற்குப் பிரதமர் நரசிம்மராவை அனுப்பாது குறைந்த தரத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## லலித் குழுவினருக்கு எதிராக
## எமது அரசியல் பலத்தை அதிகரிக்கவே நாடாளுமன்றத்துக்கு எம்.பிக்கள்!

### யோகி சொல்கிறார்

யாழ்ப்பாணம், அக். 5

லலித்-காமினி குழுவினர் இந்தியாவின் எடுபிடிகள் இந்தியப் படை தமிழர் தாயகத்துக்கு வருவதற்குப் பின்னணியில் இருந்தவர்கள்.

இப்போதும் தமிழர்களுக்கு எதிரான ஒரு சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள்.

[illegible] ஈரோஸ் சுயேச்சைக் குழுவை பயன்படுத்துகிறோம். அதன் சார்பில் 11 எம் பிக்கள் நாடாளுமன்றம் செல்லவுள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் நேற்று நடத்திய கலை ஆசிரியர் தின விழாவில் திரு. யோகி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை திரு. த. மகாசிவம் தலைமையில் நடைபெற்ற அந்த விழாவில் பேசும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் நான் பேச்சுவார்த்தைக்குப் போய்விட்டேன் என்று வதந்தி பரப்பட்டது. அது வெறும் வதந்தி. நான் எங்கும் போகவில்லை.

இந்தியப் படையை இங்கு கொண்டுவருவதற்காக

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

டென்மார்க்கில் பணிபுரியும் செவ்வாய்க் குற்றமுள்ள 29 வயதான மணமகனுக்கு டென்மார்க் செல்ல விரும்பும் மணப்பெண் தேவை. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: சண்முகநாதன், 465/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [4328]

### யந்திரம்

நாலூறு, கண்ணூறு, தரித்திரம் நீங்கவும், பதவி உயர்வு, தொழில் விருத்தி அடையவும் யந்திரம் வழங்குகிறோம். வளர்பிறையில் பூசைசெய்து பூரணவன்று கொடுக்கப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். பலன் பெறாவிடில் பணம் திருப்பித் தரப்படும். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். (18297)

### ஆண்டு – 5

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதி புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 06 - 10 - 91 ஞாயிறு வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [18309]

### முத்தாமணக்கு விதை

பல் பயன் பயக்கும் முத்தாமணக்கு விதை நடுகைக்கு வேண்டுவோர், ரூபா 2/- அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-0607]

## விசர்நாய்க்கடி தடுப்பூசிக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்து (ஏ. ஆர். வி.) இல்லாததால் நோயாளர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் கடனாகப் பெற்றே நோயாளர்களுக்கு சமீப நாட்களாக ஊசி ஏற்றப்பட்டு வந்தது. தற்போது அவர் விடமும் தடுப்பு ஊசி மருந்து முடிவடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் விசர் நாய்க்கடிக்கான தடுப்பூசி மருந்து முடிந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## மலாயன் ஓய்வூதியர்

நவாலி, அக். 5

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியப் பற்றுச்சீட்டுகளும் அவற்றுக்குரிய காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு யாழ். செயலகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பற்றுச்சீட்டுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ள படிவத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களைத் திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டியிருப்பதால் படிவங்களைத் சரியாகப் பூர்த்திசெய்து உடன் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்குமாறு ஓய்வூதியத் திணைக்களப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-100]

பட்டப்படிப்புக்கள்

கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A.

யாழ்ப்பாணம்.

வணிக முதற் தேர்வு
1St in Com.

ஆரம்பம்: 05 - 10 - 91 சனிக்கிழமை
காலை 8 - 30 மணி. (சி 0683)

## ஓராண்டு நினைவஞ்சலி



| மண்ணுலகு: | விண்ணுலகு: |
|---|---|
| 07 | 16 |
| 02 | 10 |
| 1971 | 1990 |

செல்வன்

### சின்னக்குட்டி கனகரத்தினம்
(கண்ணன்)

திதி: 05 — 10 — 1991

நீண்டதோர் வாழ்வில் நீ இருப்பாய் என்றிருந்தோம்
ஆண்டதோர் பத்தொன்பதில் அகன்றேனோ -
சென்றாய் - நீ
மீண்டுமுனைக் காண்பவரார் கண்ணா! என்றுமே
ஆண்டவனடியில் உன்னாத்மா அமரராக அமரட்டும்!

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

வரணி வடக்கு,
மாசேரி [18283]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனம் தங்கவேல்
[ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ். மத்தியகல்லூரி]

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14 - 02 - 1929 | 26 - 09 - 1989 |

திதி: 05 - 10 - 1991

அன்புடனும், பண்புடனும், அறிவுடனும் இல்லறம் நடத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

–குடும்பத்தினர்.

23, 2 ஆம் ஒழுங்கைத் தெரு,
யாழ்ப்பாணம். [18293]

C. C. A.

கலை, வர்த்தகக் கல்லூரி
யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகாமை)

1991 துரித வினா - விடை மீட்டல்
A/L வகுப்புகள் ஆரம்பம்
DAY CLASS & SAT , SUN.

ஆரம்பம்: 06 10 - 1991 காலை 7-30 மணி
[வழமையான ஆசிரியர் குழு]

தமிழ் - குழந்தை

A/L 1992 பிரிவு III

ஆரம்பம்: 5 - 10 - 1991 சனி காலை 7-30மணி [சி-0681]

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| இகம்: | பரம்: |
|---|---|
| 9 | 1 |
| 4 | 10 |
| 1951 | 1986 |

### திருமதி சியாமளா புஸ்பராசா
[விஞ்ஞான ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை]

நீங்கா நினைவாய் நிழல் உருவாய்
பாங்காய் எம்முடன் பதிந்த அம்மா!
ஐந்து ஆண்டுகள் - அறுபது திங்கள் முன்
பந்தம் அறுத்து பரனடி சார்ந்தீர்
வெந்த உள்ளங்கள் வெற்றுடல் சுமந்து
சிந்திய கண்ணீர் வெள்ளம் அள்ளி
வந்தனை செய்கிறோம் அஞ்சலியாக!

கணவன், மகள்
குடும்பத்தினர்.

18, முள்ளி வீதி,
அரியாலை. (18301)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சா. தனலட்சுமி ர. ரூபவதனா

| மலர்வு: 17-2-1934 | மலர்வு: 14 2-1963 |
|---|---|
| அந்நியர் அழிப்பு: | |
| 3-9-1990 | 17 9 1990 |

திதி: 5-10-1991

அன்பின் கடலாய், பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்து என்றும் எங்கள் இதயத்தை விட்டகலா உங்கள் மறைவின் முதலாம் ஆண்டு பூர்த்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவர்,
மருமகன் – வே. ரஞ்சனதாஸ்,
ஆசைமகன், பேரன்–சுரேஸ்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

தெணியம்பை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (18307)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

A/L பிரிவு 3 கலை, வர்த்தக
மீட்டல் வினா-விடை
Day Classes

ஆரம்பம்: 7-10-1991

பொருளியல் — திரு. கலாகரன் (8-9)
வர்த்தகம் — திரு. ரெட்ணம் (10-11)
கணக்கியல் — திரு. S K. பிரபாகரன் (9-10)
இந்து நாகரிகம் — பிரபல ஆசிரியர்
அளவியல் — பிரபல ஆசிரியர் (11-12)
(சி/0678)

## காணவில்லை

### சுப்பையா ராதிகா (ராதா)

சுப்பையா ராதிகா (ராதா) என்ற 10 வயதுச் சிறுமி 26 - 09 - 1991 அன்று நடைபெற்ற ஓர் உற்சவத்தை காண சண்டிலிப்பாயிலிருந்து வண்டியில் சென்றவர் திரும்பி வரவில்லை. இவரை நல்லூரடியில் பின்னர் கண்டதாக சிலர் தகவல் தந்தனர். இவர் 3½ அடி உயரமும், மா நிறமும் கொண்டவர். காணாமல் போன அன்று வெளிர் நீல நிற பூ அடுக்குச் சட்டை அணிந்திருந்தார். தலைமயிர் கட்டையாக (கிறிக்) வெட்டப்பட்டுள்ளது. இவரைக் கண்டவர்கள், தகவல் தெரிந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் சன்மானம் வழங்கப்படும்.

திரு. ஆ. அப்பாத்துரை.

காளி கோவிலடி,
சண்டிலிப்பாய் [சி-0615]

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

அரசாங்க எழுதுனர் சேவை

போட்டிப் பரீட்சைக்கான
1 மாத துரித பயிற்சி வகுப்புகள்
[புதிய பிரிவு]

ஆரம்பம்: 07-10-1991 பி. ப. 2மணி

பாடநெறி: மொழித்தேர்ச்சி -
பொதுஉளச்சார்பு

★ விரிவுரைகள் - திங்கள், செவ்வாய், புதன் - பிற்பகல் 2—5
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 250/- (முழுமையாகவும்)

ASTAN INSTITUTE,
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
[இ-6669]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| — | 05 |
| — | 09 |
| 1899 | 1991 |

### அமரர் பிள்ளையார் நல்லதம்பி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வேலணை கிழக்கு,
வேலணை - 4 [18322]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அத்திவாரம் இட்டவர்கள்

ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றில், நினைவிலிருந்து இலகுவில் அழிக்க முடியாத, மறக்க முடியாத தினங்கள் பல. அவற்றில் அக்டோபர் ஐந்தாம் திகதியும் ஒன்றாகும்.

1987 ஆம் ஆண்டானது, தமிழர் அரசியலில் பல மாற்றங்களையும், திருப்பங்களையும் தந்தது. அத்தோடு பல சோதனைகளையும் வேதனைகளையும் ஈந்தது. அந்த ஆண்டு வந்த அக்டோபர் மாதத்தை தமிழர் மனங்களையும், சரித்திரத்தையும் விட்டு அகற்றுவது கடினம்.

தனது சொந்த நலன்களை முதன்மைப்படுத்தியும், ஈழத் தமிழர் அரசியல் நலன்களைச் சாகடித்தும் இயற்றப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தமிழர்கள் மீது திணிப்பது கடினம் என்பதைப் புரிந்து கொண்டதும், சீற்றம் அடைந்து மூர்க்கத்தனம் கொண்டதும் அந்த அக்டோபர் மாதத்திலேயே.

இந்தியா ஈழத் தமிழ் மண்ணில் கால் பதித்தது, தமிழ் மக்களின் உரிமைகளை வென்று கொடுப்பதற்கல்ல; ஸ்ரீலங்காவுடன் கூட்டாகச் சதி செய்து அவர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி விடுவதற்கே என்பதைத் தமிழர்களுக்கு வெளிச்சப்படுத்திய நாள் - புரியவைத்த நாள் - அக்டோபர் ஐந்தாம் திகதியாகும்.

ஒப்பந்தத்துக்கு முரணாக ஸ்ரீலங்காப் படையால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் இரு தளபதிகளையும், மற்றும் 11 போராளிகளையும் விடுவிப்பதற்கு திராணியில்லாதவர்களாக வெளியிலே வேடம் போட்டுக்கொண்டு—

ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து போராளிகளின் மரணத்துக்கு இந்தியா காரணமாக இருந்தது என்பதை தமிழர்கள் அன்று முற்றுமுழுதாக புரிந்து கொண்டனர்.

ஈழத்தில் உரிமைப் போராட்டம் வெற்றி கண்டு, தமிழீழம் உருவாகுவதை இந்தியா அறவே விரும்பவில்லை. அதற்கு ஆதரவளித்தால் தமது நாட்டில் எழுந்த, எழப்போகின்ற பிரிவினைக் கோரிக்கைகளை நிறைவேற்றியாக வேண்டும். அது தன் தலையில் தானே மண் அள்ளிப்போடுவதாகி விடும்.

அதனால் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கி விட வேண்டும் என இந்தியா நினைத்தது. தமிழர்களுடன் எதிரியாகிவிட்டால் அங்கு தமிழகத்தில் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரும். தமிழக மக்களும் பிரிவினை கோரி மூச்சுடன் எழக் கூடும்.

அதனைத் தவிர்த்து ஈழத் தமிழர்களின் நண்பனாக நடித்து, நம்ப வைத்து— நம்ப வைப்பதற்கான சில காரியங்களைச் செய்து காட்டி— சேர்ந்திருந்து கழுத்தறுத்து விட இந்தியா — அப்போதைய ராஜீவ் அரசு — திட்டமிட்டிருந்தது.

ஆனால், அது பலிக்கவில்லை; சாத்தியமாகவில்லை. தமிழ் மக்களின் விடுதலை உணர்வுக்கு முன்னால் முகம்கொடுக்க முடியவில்லை. தோல்வியுடனும் இழப்புகளுடனும் அகில உலக அபகீர்த்தியுடனும் தமிழ் மண்ணை விட்டு இந்தியா அகன்றது.

இந்தியாவின் அந்தத் தோல்விக்கு அத்திவாரம் இட்டவர்கள் தளபதிகள் குமரப்பா, புலேந்திரனும் ஏனைய 11 போராளிகளும் என்றால் மிகையல்ல.

# வவுனியா வியாபாரிகளின் போக்குவரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், அக். 5

வியாபார நோக்கத்துக்காக வவுனியா செல்வோருக்குரிய போக்குவரத்தில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்ட மன்னெண்ணெய் அனுமதி சனிக்கிழமையாக மாற்றப்பட்டதாலும், ஒரே நாளில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் செல்வதால் ஏற்படும் நெருக்கடிகளைக் குறைக்கும் முகமாகவுமே இந்த மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி—

ஞாயிறு, திங்கள் — வவுனியா, மன்னார் மாவட்டங்கள்

செவ்வாய், புதன் — முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள்

வியாழன், வெள்ளி— யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்

இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை; அதேபோல் தொடர்ந்து வரும் சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பின்னர் வவுனியா, மன்னார் என்ற வரிசைக்கிரமத்தில் அனுமதி வழங்கப்படும். [ஓ]

# இராணுவம் வடக்கில் தெங்குப் பயிர்ச்செய்கை!

கொழும்பு, அக். 5

வடபகுதியில் அரசுப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காரைநகர், ஆனையிறவு மற்றும் வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் உள்ள ஆயிரம் ஏக்கர் காணியில் தெங்குப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவிருக்கிறதாம்!

கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இம்மாதம் பத்தாம் திகதி இராணுவ தினமாகும். அன்றைய தினம் உத்தேச தெங்குப் பயிர்ச்செய்கைத் திட்டத்தை வடபகுதி இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தினா ஆரம்பித்து வைப்பார் என்று இலங்கை வானொலி அறிவித்தது. [அ-எ]

## நல்லாசான்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், அக். 5

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட ஆசிரியர் தின விழா நாளை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கோட்ட மட்டத்தில் நல்லாசான்களாகத் தெரிவு செய்யப்பட்ட 103 ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவர். இவர்களுடன் மாவட்ட மட்டத்திற்கு நல்லாசான்களாகத் தெரிவு செய்யப்பட்ட 35 ஆசிரியர்களும் 5 அதிபர்களும் கௌரவிக்கப் படுவர். (ச)

## யாழ். கோட்ட ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். கோட்ட ஆசிரியர் தின விழா நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். இது குறித்து பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதம் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறிவித்திருக்கிறார். (அ)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், அக். 5

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் தனது 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுகிறது. நிலைய மைதானத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

# ஈழ அகதிகளை ஏற்றிவர மாலைதீவுக் கப்பல் தயார்!

யாழ்ப்பாணம், அக். 5

தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழ அகதிகளை இங்கு ஏற்றி வருவதற்கு மாலைதீவுக் கப்பல் ஒன்றை புனர் வாழ்வு அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் கொழும்பில் புனர் வாழ்வு அமைச்சில் நடந்த கூட்டத்தில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

மன்னாரில் இருந்து அகதியாகச் சென்ற அரச ஊழியர்களும், அவ்வூர் வாசிகளுமாகச் சேர்ந்து 900 பேர் முதலில் அழைத்து வரப்படுவர் என்ற தகவலும் அங்கு தெரிவிக்கப்பட்டதாம்.

அகதிகளை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்றும், அவர்களைப் பொறுப்பேற்க தயார் நிலையில் இருக்குமாறு மன்னார் செயலக அதிகாரிகளுக்கு கடந்த திங்கட்கிழமை பணிப்புரை அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## தொடர் சொற்பொழிவில் நாளை

யாழ்ப்பாணம், அக். 5

ஞாயிறு சொற்பொழிவுத் தொடரின் இரண்டாவது அமர்வாக நாளை ஞாயிற்றுக்கிழமை "60 ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்" என்ற பொருள் பற்றிய மூதறிஞர் திரு. க. சி. குலரத்தினம் உரை நிகழ்த்துவார்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்ச்சி இடம்பெறும். (இ)

## கடலுக்குச்செல்ல மீனவர் அச்சம்

வடமராட்சி, அக். 5

பருத்தித்துறை, வல்வெட்டித்துறைக் கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் நடமாட்டம் கடந்த சில தினங்களாக அதிகரித்திருப்பதால் மீனவரின் தொழில் பாதிப்படைந்து வருகிறது.

கடற்படையினர் இப்பகுதிகளில் இருந்து கண்மூடித்தனமாக பீரங்கிச் ஷெல் தாக்குதல்களை நடத்துகின்றனர் என்று கூறப்படுகிறது. (இ-165)

## விதைநெல் விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 5

விவசாயிகளுக்கு விதை நெல் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை ஆய்வு நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரிவு செய்துள்ளது.

கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக விதைநெல் விநியோகம் நடைபெறும். விவசாயிகள் பிரதேச இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு விதை நெல்லைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டது. (அ)

## காலமானார்

யாழ்ப்பாணம், அக். 5

ஈழத்தின் பிரபல ஓவியரான அ. இராசையா காலமானார்.

இவர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நீண்டகாலமாக விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணத்துக் கிராமிய வாழ்வின் வாசனை மீள் கண்டுபிடிப்புச் செய்வனவாக இவரது ஓவியங்கள் அமைந்திருந்தன.

இவரது ஓவியக் கண்காட்சிகள் பல தடவைகள் கொழும்பு கலாபவனத்தில் இடம்பெற்றுள்ளன.

இறக்கும்போது இவருக்கு வயது 65. (அ)

## பயண அனுமதி; இன்று விடுமுறை

யாழ்ப்பாணம், அக் 5

லெப். கேணல் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி இன்று சகல பிரயாண அனுமதி வழங்கும் அலுவலகங்களும் மூடப்பட்டிருக்கும் என தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது. [ஓ]

## கிராமியக் குழு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பி. ப. 2.30 மணிக்கு இக்கலந்துரையாடல் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது (அ)

# உள்ளூரில் தயாராகும் புதிய கடலுணவுகள்

# உச்சப் பயன்பாடு தரும் சமுத்திரா தொழிலகம்

## விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் புதிய திட்டம்

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை உள்ளூர் மூலவளத்தைத் திறம்படப் பயன்படுத்துவதிலும் உள்ளூர் உணவு வகைகளை, குறிப்பாக கடல் உணவுகளை பதனிடுவதிலும் இன்று புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகின்றது.

விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் நிறுவப்பட்டிருக்கும் கடல் உணவுகளைப் பதனிடும் தொழிற்சாலையான 'சமுத்திரா' கடல் உணவு உற்பத்தி நிலையம் இன்று சுழிபுரப் பகுதியில் உள்ள ஒரு கிராமமொன்றில் திறந்து வைக்கப்படுகின்றது.

கடல் உணவு வகைகளை புதிய முறையில் தயார் செய்வதிலும், பதனிடுவதிலும் ஒன்பது மாத கால பரீட்சார்த்த நடவடிக்கைகள் முழு வெற்றி கண்ட பின்னர், இந்தத் தொழிற்சாலை இன்று முதல் பொதுமக்கள் சேவைக்காக திறந்து விடப்படுகின்றது.

கடலிலிருந்து பெறப்படும் மீன், இறால் போன்றவற்றை உரிய முறையில் பதனிட்டு, புதிய வடிவத்தில் — புதிய வகையில் — ஊட்டச்சத்து மிக்க உணவாக தருவதில் — இந்த உள்ளூர் உற்பத்தி நிறுவனம் சாதனை கண்டிருக்கிறது.

'சோயா மீற்' எனப்படும் மரக்கறிப் புரதம் போன்று கறிசமைப்பதற்கு இலகுவாக மீனைப் பதனிட்டு 'பைக்கெட்டு'களில் அடைத்து விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் சமுத்திரா கடல் உணவு உற்பத்தி நிலையத்தினர்.

மீனைக் கழுவி, அவித்து, சுத்தம்செய்து உள்ளூர்த் தாவரப் புரதங்களுடன் சேர்த்து அரைத்து, காயவைத்து, இன்னச் சின்னத் துண்டுகளாக்கி இவிப்பு வகைகளை அடைப்பது போலப் பைக்கெட்டுகளில் அடைக்கிறார்கள். 150 கிராம் கொண்ட பைக்கெட்டின் விலை 18 ரூபா ஆகும்.

### மீன்-இறால் வடகங்கள்

இதுபோல, மீன் வடகம், இறால் வடகம், இரண்டையும் கலந்து மீன் - இறால் வடகம் என்று கடலுணவை பல்வேறு வகைகளாகப் பதனிட்டு, தயாரித்து 'பைக்கெட்டு'களில் அடைத்து விற்பனைக்கு விட்டிருக்கிறார்கள்.

இது தவிர மீனைப் பதனிட்டு பொடி செய்து மீன் மசாலாப்பொடிதயாரிக்கப்பட்டுள்ளது. எந்த உணவுப் பொருளுக்கும் மீன் மசாலாவைத் தூவி, அந்த உணவுப் பொருளை ருசி மிக்கதாக்கலாம் என்று சமுத்திரா உற்பத்தி நிலையத்தினர் கூறுகின்றனர்.

இது தவிர, மீன் முள்ளு, செதில் ஆகியவற்றை அரைத்து மீன் தூள் என்ற கால்நடைத் தீனை தயாரித்துள்ளனர். இது முட்டையிடும் கோழிகளுக்கும், பால் சுரக்கும் மாடுகளுக்கும் நல்ல தீவனம் என்று கண்டறியப்பட்டுள்ளது. பால் சுரக்கும் பசுவுக்கு பத்துக் கிலோ தவிடுக்கு ஒரு கிலோ மீன் தூள் என்ற வீதத்தில் கலந்து உணவளிப்பதன் மூலம் அதிக பாலைக் கறக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் மீனைத் துப்புரவு செய்யும்போது அகற்றப்படும் கழிவுகளை கோழிகளுக்கு வழங்கி, கோழிப் பண்ணை மூலம் மேலதிக வருமானத்தைப் பெறவும் சமுத்திரா நிறுவனம் முயற்சி எடுத்திருக்கிறது.

மொத்தத்தில் கடலிலிருந்து பெறப்படும் மீன், இறால் போன்றவற்றின் எந்தப் பாகத்தையும் வீணாக்காமல், வீசாமல் உச்சப் பயனைப் பெறுவதற்கு ஒரு முழு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. [illegible] உரிய வாய்ப்பை பெற்றுக் கொடுத்தாலும் —

தேவைக்கு, பாவனைக்கு அதிகமாக மீன் பிடிபடும் பருவ காலங்களில் மீன் பழுதடைந்து வீணாவதையும், மீனவர்கள் நஷ்டமடைவதையும் தடுக்கவும் —

போக்குவரத்துச் சீரில்லாத இத்தகைய காலத்தில் கடலிலிருந்து பிடிக்கப்படும் மாமிச வகைகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்க வேண்டிய நெருக்கடிகளைத் தவிர்க்கவும் —

### பயன்களோ பல

புதிய தொழிலகம் ஒருவரப் பிரசாதமாக இருக்கும் என்று கூறலாம்.

இந்த நிறுவனத்தை அமைத்ததால் வடக்கிற்கு கிடைக்கவிருக்கும் பயன்களைப் பின்வருமாறு வகுக்கலாம்:-

★ கடல் வளத்தை நன்கு பயன்படுத்த முடியும். அதன் உச்சப் பயன்பாட்டைப் பெறலாம்.

★ கடல் உணவு பதனிடுதல் முறையில் புதிய மாற்று வழிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ உள்ளூர் உணவுத் தேவைகளை கணிசமான அளவு பூர்த்தி செய்யலாம்.

★ எமது மக்களின் உணவில் புரதத்தின் விகிதாசாரத்தை அதிகரிக்க உதவுகிறது.

★ உள்ளூர் வளங்கள் நன்கு பயன்படுத்தப்படுகின்றன.

★ புதிய தொழில் நுட்பங்கள் கண்டறியப்பட வாய்ப்பு ஏற்படுகின்றது.

★ கடல் உணவைச் சந்தைப்படுத்தலில் நிலவி வரும் பழைய தவறான முறையை மாற்ற முயற்சிக்கப்படுகிறது.

★ புதிதான தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

★ கடல் உணவு விடயத்தில் நிலையான சந்தை வாய்ப்பு தோன்றப்படுகிறது.

★ கடல் உணவு வகைகள் [illegible] மக்களைச் சென்று அடைகின்றன.

### புலிகளின் முழு ஆதரவு

இத்தகைய நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதாலும், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகவும் இத்தகைய முயற்சிக்கு தமது இயக்கம் முழு ஆதரவு தர முன்வந்ததாக விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவர் சொன்னார்.

உள்ளூர் மூலவளத்தைப் பயன்படுத்தி, உள்ளூர் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு சில கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்று கூடி, இத்தகைய முயற்சிக்கு வித்திட்ட போது, அவர்களுக்குத் தோள் கொடுத்து உதவ விடுதலைப் புலிகள் முன்வந்தனர்.

இந்த நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்காக இந்த இளைஞர்களுக்கு முற்பணமாகவும், பொருள்களாகவும் விடுதலைப் புலிகள் ஐந்து லட்சம் ரூபா வரை கொடுத்து உதவியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தி முயற்சிக்கு சிறந்த திட்டங்களையும், அந்தத் திட்டங்களைச் செயற்படுத்தக் கூடிய திறமையும், ஊக்கமும் கொண்டவர்களுக்கு எல்லா வித உதவிகளையும் வழங்கி, ஊக்கொடுப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார் என்று புலிகளின் பிரமுகர் சொன்னார்.

'சமுத்திரா' கடல் உணவு உற்பத்தி நிலையம் உள்ளூரில் உற்பத்தியான கருவிகளைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பல இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் இதனால் வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

ஆரம்பத்தில் இந்த நிலையத்தில் தினசரி நூறு கிலோ உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படும் என்றும், காலப்போக்கில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

## யாழ்ப்பாணக் கல்லூரியில் மீண்டும் பட்டப் படிப்புகள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் என்பன நடத்தும் வெளிநிலைப் பட்டப் படிப்பிற்கான [G. A. Q.] விரிவுரைகள் 10 - 10 - 1991 வியாழன் பி. ப. 3 - 00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 09 - 10 - 1991.

★ அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க வகுப்புக்கள் மாலை நேரத்திலேயே நடைபெறும்.
★ சிறப்புத் தகுதி வாய்ந்த அனுபவமிக்க விரிவுரையாளர்களினால் விரைவுரைகள் நடத்தப்படும்.
★ ஆங்கிலம் உட்பட சகல பாடங்களுக்குமான விரிவுரைகள் நடத்தப்படும்.
(அடிப்படை ஆங்கில வகுப்புப் பயிற்சிகளும் நடத்தப்படும்)
★ நூலக சேவை வழங்கப்படும்.

– முதல்வர்.

கல்லூரிப் பூங்கா,
வட்டுக்கோட்டை.
(சி/0617)

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

1991-10-04 இல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11 பதவிக்கான விண்ணப்பங்கள் மட்டுமே கோரப்பட்டுள்ளன. ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர் தரம் 11 இற்கான
சம்பள அளவுத்திட்டம்: ரூபா 3,500 – (நிலையானது) மாதம் ஒன்றிற்கு.

மேற்படி தவறுக்காக வருந்துகின்றேன்.

– பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-10-04.
[சி/0618]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L Paper Classes பிரிவு: 3
Day Classes பிரிவு: 6
(8-30 — 2-00)
Evening Classes பிரிவு: 3
(4-00 — 6-00)
ஆரம்பம்: 07 - 10 - 1991

மு. குறிப்பு: கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
(சி-0675)

*Modern Education Centre*
KARAVEDDY.

புதிய பகல் நேர வகுப்புக்கள்

## G. C. E. A/L 1991

துரித மீட்டல் வகுப்பும், வினா - விடை வகுப்பும்.

இரசாயனம் – சண்முகசுந்தரம்
சனி, ஞாயிறு.
பௌதிகம் – பாலச்சந்திரன்
செவ்வாய், சனி.
கணிதம் – வேலாயுதம் (வெக்டர்)
திங்கள், செவ்வாய், புதன்.
விலங்கியல் – சிவபாதசுந்தரம்
திங்கள், புதன்.
தாவரவியல் –
சனி, ஞாயிறு.

ஆரம்பம்: 05 - 10 - 1991
காலை 9-00 மணி. [சி-0616]

## யாழ். எம். பிக்கள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
எம். பி. பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவதற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மற்றைய மூன்று பேரின் பெயர், விவரங்களும் இன்னும் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

இனிமேல்தான் எம்.பிக்கள் குழு கொழும்புசென்று, பட்டியலைத் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்க வேண்டும். அதனைத் தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொண்டு, நாடாளுமன்றச் செயலருக்கு இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுப்பார். அதன் பின்னரே அவர்கள் நாடாளுமன்றில் சத்தியப் பிரமாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

எனவே எதிர்வரும் எட்டாம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது எஞ்சிய மூன்று எம். பிக்களும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்களா என்று இன்னும் திட்டவட்டமாகத் தெரியவரவில்லை. [உ-8]

## திருவிலில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
மையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) சிறப்புரை ஆற்றுவார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் திருவாளர்கள் யோகரத்தினம் யோகி, மாறன், ரூசை, பரா, தமிழ்ச் செல்வன், செல்வி ஜெயா ஆகியோரும் நினைவுரை நிகழ்த்துவர்.

இன்று நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளில் அனைத்து தமிழீழ மக்களையும் பங்குபற்றி, இந்த மாவீரர்களின் இறுதி இலட்சியத்தை வென்றெடுக்க ஓர் அணியில் திரளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### ஆசிரியர், மாணவர்

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம், தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஆகியனவும் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் இன்றைய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன. தனியார் கல்வி நிறுவனங்களை இன்று மூடுமாறும் த.க.நி. ஒன்றியம் கேட்டுள்ளது.

போக்குவரத்து ஒழுங்குகள் பிரதேசப் பொறுப்பாளர்களினால் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## சிறுவன் மரணம்

கிணற்றில் தவறுதலாக விழுந்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் வியாபாரி மூலையில் நடைபெற்றது. ச. ஜெயகாந்தன் [வயது 5] என்பவரே இறந்தவர் ஆவார். [இ-165]

## பிரேமதாஸா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அதன் காரணமாக ஐ.தே.க. வில் அதிருப்தியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் உண்டு என்றும்— அவதானிகள் மேலும் தெரிவிப்பதாக ஜேர்மன் செய்தி ஸ்தாபனம் ஒன்று தெரிவித்தது. (அ-8)

## 89இல் பிரேமா...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தில் உள்ளவர்களை அனுப்புவதற்கு இந்தியா ஏற்பாடுகள் செய்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இந்தியப் பிரதமருக்கு ஸ்ரீலங்காவில் போதிய பாதுகாப்புக் கிடைக்காது என்று இந்தியா கருதுவதும் மற்றொரு காரணமாகும்.

இந்தியப் பிரதமர் கொழும்பு மாநாட்டில் கலந்து கொள்ளாவிட்டால், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளின் உயர் தலைவர்களும் இம் மாநாட்டிற்கு வரமாட்டார்கள் என்பது அனேகமாக ஊர்ஜிதமாகிவருகிறது. [அ]

## எமது அரசியல்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தெற்கில் பெரும் குழப்பம் ஒன்றை ஏற்படுத்தியவர்கள் இந்த லலித்—காமினி குழுவினர். அவர்கள் இந்தியாவின் எடுபிடிகள். இன்று தென் இலங்கையில் பெரும் இனவாதப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த இனவாதக் குழுவுக்கு—இந்தியாவின் எடுபிடிகளுக்கு— எதிராகவே எமது பலத்தை நாம் பாவிக்கமுடிவு செய்தோம்.

அதன் பொருட்டு வடக்கில் இருந்து 9 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், திருகோணமலையில் இருந்து இருவரையும் அனுப்புகிறோம்.

கொழும்புக்கு வெளிநாட்டில் இருந்து வந்துள்ள சங்கர் ராஜியும் இந்திய ஆதரவாளர் தான்.

ஈரோஸ் அமைப்பு இந்திய அமைதிப் படையிடம் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர் இவர்தான். அந்தக் கையளிப்புக்காக, இந்தியப் படை இருக்கும் போதுதான் இங்கு வந்தார். இவர் இந்திய அரசின் ஏஜன்டாக செயற்பட்டுள்ளார்.

எமது பலத்தை அதிகரிக்க ஈரோஸ் சுயேச்சைக் குழுவை பாவிப்பதென்ற எமது முடிவை, எமது இலட்சியத்தைக் கைவிட்டோ, அல்லது ஏதாவது விட்டுக்கொடுப்புகளைச் செய்யும் நோக்குடனோ மேற்கொள்ளவில்லை.

அரசியல் நிலைமையை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும் என்ற நோக்கில் பணி புரிகிறோம்.

இந்தியப் படை இருந்த வேளை எமது தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் போன்றவர்கள் மரணமானார்கள். அவர்கள் பலியாவதற்குக் காரணமாக இருந்த கடல் ஆக்கிரமிப்பை தகர்க்க வேண்டும் என்பதற்காக எமது போராளிகள் கடற்கண்ணிகளை நவீன முறையில் தயாரிக்க முனைந்தார்கள்.

இன்று மறைந்த புலிகளின் நினைவையொட்டி எழுச்சி நாள் இடம்பெறும் வேளையில், கடற்கண்ணித் தாக்குதலில் வெற்றியும் பெற்று வருகிறோம். கடற்கண்ணிகள் எமது சொந்தத் தயாரிப்புகளாகும். இஸ்ரவேலின் கண்டுபிடிப்பல்ல — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா, கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா, தொலைக்கல்வி பிராந்திய இயக்குநர் திரு. எம். எஸ். அலெக்சாந்தர் ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் (சித்தன்கேணி)

வினா—விடை
பொருளியல்

## திரு. கலாகரன்

B. B. A.
சனி, ஞாயிறு 5—6 வரை.
[சி-0686]

## நடிகர் தேவை

தொலைக்காட்சிப் படமொன்றில் நடிப்பதற்கு நடிகர் ஒருவர்தேவை; 60வயது மதிக்கத்தக்க, சாதாரண தோற்றமுடையவராகவும், ஓரளவு குரல் வளமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் முன் அனுபவம் வேண்டியதில்லை; படத்தில் நடிக்கும் ஆர்வம் போதுமானது.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 1991 - 10 - 07 [திங்கள்] காலை 10 மணிக்கு (சரியாக) நிதர்சனம் செயலகத்தில் சமுகமளிக்கவும்.

**"நிதர்சனம்"**
நீப் வீதி, திருநெல்வேலி, தமிழீழம்.
(சி/0619)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## சீருடை வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

கீழ்க் குறிப்பிடப்படும் துணி வகைகளை இவ்வலுவலகத்திற்கு வழங்குவதற்கான கூறுவிலைகள் என்னால் 15 - 10 - 1991 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 - 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கூறுவிலை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சீருடை 1991" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வழங்கக் கூடிய துணியின் வகை, தரம் என்பவற்றைக் குறிப்பிடுவதோடு, மாதிரிக்காக சிறு துண்டு இணைக்கப்படுதல் வேண்டும்.

| துணியின் வகை | தேவைப்படும் தொகை (அண்ணளவாக) |
|---|---|
| 1. இருண்ட சாம்பல் நிற சிந்தெற்றிக் துணி - 58" | - 280 மீற்றர் |
| 2. வெள்ளை நிற சிந்தெற்றிக் துணி - 58" | - 45 மீற்றர் |

செல்வி தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்.

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
10 - 10 - 1991.
[சி/0685]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளிப்பிள்ளை

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி வள்ளிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், சுந்தரமூர்த்தி, சுப்பிரமணியம், நடராஜா, இராசரத்தினம், தங்கராஜா ஆகியோரின் தாயாரும், மகேஸ்வரி, புஸ்பதேவி, காலஞ்சென்ற இராஜலட்சுமி, திலகலட்சுமி, கோமளவல்லி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் சங்கானையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்கட் வீதி,
சங்கானை.

தகவல்:
த தங்கராசா
[18104]

### திருமதி மணிமேகலை இராசலிங்கம்

திருநெல்வேலி தலையாழி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி மணிமேகலை இராசலிங்கம் அவர்கள் 4-10-91 வெள்ளிக்கிழமை காலமானார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திரு. இராசலிங்கம்

ரூபன் ஸ்ரோர்,
திருநெல்வேலி மார்க்கட்.
(18105)